# ***திருமுறைகளில் பெண்கள்***
# Women In Thirumurai

*முனைவர் இரா. சீதா லட்சுமி இராதாகிருஷ்ணன்*
Dr. R. Seeta Lechumi Ratha krishnan[11]

*Manuscript received 1 March 2023*
*Manuscript accepted 30 July 2023*

**ஆய்வுச் சுருக்கம்**

*சிவப்பரம்பொருளை முழுமுதற் கடவுளாகக் கொண்டு விளங்குவது சைவ சமயம். இச்சைவ சமயம் மிகவும் பழமையும் பெருமையும் வாய்ந்த சமயம்; தொன்மைப்பெருமை கொண்ட சமயம். உலகுக்கு நல்வழி காட்டி மக்களை உய்விக்கும் ஆற்றல் பெற்ற இச்சைவ சமயத்தின் பெருமையை உலக மக்கள் நன்கு அறிந்துள்ளனர். சிவனெறி சார்ந்த அருளாளர்கள், சிவப்பரம்பொருளை வாழ்த்தியும் விளக்கியும் எண்ணிறைந்த நூல்களை அருளிச் செய்துள்ளனர். அவற்றுள் சிவப்பரம்பொருளை வாழ்த்துவதாக அமைந்த நூல்கள் தோத்திர நூல்கள் எனவும் சைவ சமயக் கோட்பாடுகளை விளக்கும் நூல்கள் சாத்திர நூல்கள் எனவும் கூறப்படும். சாத்திர நூல்களில் பதினான்கு மெய்கண்ட சாத்திரங்களும் தோத்திர நூல்களில் பன்னிரு திருமுறைகளும் உயர்தனிச் சிறப்புப் பெற்றவையாகும். சிவநெறியில், சைவ சமயத்தின் பிரமாண நூல்களாகப் போற்றப்படுவனவற்றுள் தலைச்சிறந்தவை பன்னிரு திருமுறைகள் ஆகும். பன்னிரு திருமுறைகள் ஏழிசையாய், இசைப் பயனாய், இன்னமுதாய், அவற்றின் நிலைக்களனாய் அமைந்து சிறந்து விளங்குகின்றன. திருமுறைகளைச் சமயக்கண் கொண்டு அன்புடன் ஓதி இன்புறலாம்; தத்துவக்கண் கொண்டு பயின்று, ஆய்ந்துணர்ந்து மகிழலாம்; வரலாற்றுக்கண் கொண்டு நோக்கிப் பல வரலாற்றுச் செய்திகளை அறிந்து இன்புறலாம்; சமுதாயக்கண் கொண்டு ஆராய்ந்து தமிழரின் கலை, நாகரிகம், பண்பாடு ஆகியவற்றைப் பற்றி நன்கு அறியலாம். இத்தகு போற்றுதலுக்குரிய பன்னிரு திருமுறை அருளாளர்களின் திருப்பணி வெற்றிக்குப் பின்னால் அவரவர் குடும்பப் பெண்களின் அர்ப்பணிப்புக் கருத்தில் கொள்வதற்குரியது. அவ்வகையில் பன்னிரு திருமுறைகளில் காணப்படும் பெண்களின் அர்ப்பணிப்புத் தொடர்பான செய்திகளைத் தொகுத்து வழங்குவதே இக்கட்டுரையின் முக்கிய நோக்கமாகும்.*

***திறவுச் சொற்கள்***: *பெண்கள், பெரிய புராணம், பன்னிரு திருமுறை,*

## Abstract

Saivism is the interpretation of Lord Shiva as the supreme God. Saivism is a very ancient and proud religion; a time of great antiquity. The people of the world are well aware of the glory of the Saiva religion, which has the power to guide the world and heal people. Saivism principles are based benefactors have graced numerous books praising and explaining the essence of Lord Shiva. Among them, the books which are devoted to Lord Shiva are called Thothira books and the books which explain the doctrines of Saivism are called Saathira books. Among the Saathira texts, the fourteen Meikanda Sathiras and the Panniru Thirumurai of the Thothira texts are highly distinguished. In Saivisme, the Panniru Thirumurai are the most prominent among the sacred texts of Saivism. The Panniru Thirumurai are arranged in their respective positions and are excellent in terms of music and pleasure. Recite the prayers with religious vision; Learn with a philosophical vision; You can learn and enjoy many historical news with historical vision; Explore with community vision and learn about the art, civilization and culture of Tamils. The dedication of the women of their families is to be considered behind the success of their sacrifice of these Panniru Thirumurai benefactors. In this way, the main purpose of this article is to compile the messages related to women's commitment found in the Panniru Thirumurai

---

[1] The author is a senior lecturer in the Department of Indian Studies, University of Malaya, Kuala Lumpur, Malaysia. rseeta@um.edu.my

**Keywords :** Women, Periyapuranam, Panniru Thirumurai

## 1.0 முன்னுரை

தமிழர் பண்பாட்டில் பெண்கள் பல துறைகளிலும் சிறந்து விளங்கியுள்ளதைத் நமது பண்டைய இலக்கியங்கள் எடுத்தியம்புகின்றன. அதிலும், சமூக வாழ்க்கையில் இப்பெண்களுக்குப் பெரும்பங்கு உண்டு என்பது மறுப்பதற்கில்லை. குறிப்பாக, சமயத் துறையில் சீரிய பங்களிப்புச் செய்துள்ள பெண்களின் மாண்பு என்றும் போற்றுதற்குரியது. சைவ சமயத்தின் அடிப்படை நூல்களாகத் திகழும் பன்னிரு திருமுறை இப்பெண்களின் உயர்தனிச் சிறப்பினை நயம்பட எடுத்தியம்புகின்றது. இதனைச் சேக்கிழார் பெருமான் தாம் பாடியருளிய பன்னிரெண்டாம் திருமுறையாகிய பெரிய புராணத்தில் தெளிவாகப் பதிவுசெய்துள்ளார்.

### *1.1.* ஆய்வுநெறி

இந்த ஆய்வுக்கட்டுரை நூலக ஆராய்ச்சி அடிப்படையில் அமைந்துள்ளது. இந்த ஆய்வின் முதன்மை நூலாகப் பன்னிரு திருமுறையும் பெரியபுராணமும் இடம்பெறுகின்றன. பன்னிரு திருமுறை பற்றிய ஆய்வு நூல், கட்டுரை மற்றும் அதன் தொடர்புடைய பல நூல்களை ஆராய்ந்து இவ்ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

## 2.0 திருமுறை காட்டும் பெண்கள்

'பெண்மை' எனும் சொல்லே கடை குறைந்து பெண் எனப் பின், பெண்ணினத்தைக் குறிப்பிடும் அடக்கம், பொறுமை, தியாகம், பரநலம், இரக்கம், அழகு, ஒப்புரவு, தொண்டு முதலியன அமைந்த ஒன்றே 'பெண்மை' என திரு. வி. க தமது 'பெண்ணின் பெருமை'யில் கூறுகிறார்.

பெண்மையின் சிறப்புக் கருதியே நான்மணிக்கடிகை,

*மனைக்கு விளக்கம் மடவார்....*

(நான்மணிக்கடிகை: 105)

எனக் கூறுகிறது. திருவள்ளுவரும்,

*தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற*
*சொற்காத்துச் சோர்விலாள் பெண்.*

(திருக்குறள்: 56)

எனப் பெண்ணின் பெருமையைப் பறைசாற்றுகின்றார். இத்தகைய மாண்புக்குரிய பெண்களைத் திருத்தொண்டர் புராண சாரமாகிய பெரிய புராணத்துள் மொத்தம் முப்பத்துமூவரின் பெருமைகள் பாடப்பட்டுள்ளன. அவர்களுள் மூவர் நாயன்மார் எனும் பெருமைக்குரியவர்கள், 15 பேர் நாயன்மார்க்குத் துணைவியானோர்கள், 10 பேர் நாயன்மார்க்கு உறவினரானோர்கள் மற்றும் மீதமுள்ள ஐவர் பிறர் என்பதனைக் கண்டறிய முடிகின்றது (பரமசிவம், 1992).

அவ்வகையில் திருமுறை காட்டும் தகைசால் பெண்களுள் அறுவரைப் பற்றி இவ்விடம் நுணுகிக் காண்போம். அவர்களைக் கீழ்க்காணும் அட்டவணை குறிக்கிறது.

| பெண்கள் | பெயர்இடம் | பகுப்பு |
|---|---|---|
| மங்கையர்க்கரசியார் | பெயர் இடம்பெற்றோர் | நாயன்மார்கள் |
| காரைக்காலம்மையார் (புனிதவதியார்) | | |
| திலகவதியார் | பெயர் இடம்பெற்றோர் | நாயன்மார்க்கு உறவினர் |

| | | |
|---|---|---|
| இளையான்குடி மாறநாயனார் மனைவியார் | பெயர் இடம்பெறாதோர் | நாயன்மார்க்குத் துணைவியார் |
| அப்பூதியடிகள் மனைவியார் | | |
| சிறுதொண்ட நாயனாரின் மனைவியார் | | |

*அட்டவணை 1: திருமுறை காட்டும் பெண்களுள் அறுவர்*

*நாட்டிற்கும் வீட்டிற்கும் சமயத்திற்கும் சீரிய செம்பணி புரிந்த இந்நல்லாள் பெருமக்களின் பங்களிப்புகள் பின்வருமாறு அமைகின்றன.*

*2.1 சமயத்தை மீட்ட பெருந்தகையாளர்*

*சைவ சமயத்தை மீட்டிய பெருந்தகையாளர்களில் மங்கையர்க்கரசியார் அதிமுக்கியமானவராகத் திகழ்கிறார்.*

***2.1.1 மங்கையர்க்கரசியார்***

*நாயன்மார்களுள் ஒருவரான மங்கையர்க்கரசியார் சோழ மன்னனின் தவப்புதல்வியாய்ப் பிறந்து பாண்டியநாட்டு (மதுரை) மன்னன் கூன்பாண்டியனின் பட்டத்து அரசியாவார். இவரது இயற்பெயர் மானி என்பதாகும். இளமை முதற்கொண்டு மிகுந்த சிவபக்தராக வாழ்ந்து வந்த இவ்வம்மையார், பாண்டிய நாட்டில் பரவி வந்த சமணக் கொள்கையைத் துடைத்துச் சைவத்தை மீட்டு, அரும்பணியாற்றிய பெருந்தகையாளராவார் (சிவபாத சுந்தரம், 1989).*

*சைவத்தை மீட்கும் பொருட்டுத் திருஞானசம்பந்தரை மதுரைக்கு அழைக்கும் மங்கையர்க்கரசியாரும் அமைச்சர் குலச்சிறையாரும் சம்பந்தரை உபசரித்து, அங்கு சைவர் வாழும் மடத்தில் தங்க வைக்கின்றனர். சம்பந்தரின் ஆற்றலைச் செவியுற்ற சமணர்கள் சம்பந்தர் மடத்திற்குத் தீ மூட்டுகின்றனர். இறையருளால் தாம் பெற்ற ஆற்றலினால் சம்பந்தர்,*

*...சைவர் வாழ்மடத்(து) அமணர்கள் இட்டதீத் தழல்போய்ப்*
*பைய வேசென்று பாண்டியர்(கு) ஆக*
*(பெரியபுராணம் - திருஞானசம்பந்த நாயனார் புராணம் : 704)*

*என்றவாறு அத்தீ மெதுவாகச் சென்று பாண்டியனைப் பற்றும்படி ஆணையிட்டார்; சொன்ன மாத்திரத்தில் பாண்டியன் உடல் முழுவதும் வெப்புநோய் ஏற்பட்டுத் துடிதுடித்தான்.*

*சமணர்கள் மன்னனின் வெப்புநோயைத் தீர்க்க முயன்று தோல்வியுற்றனர். மங்கையர்க்கரசி, சம்பந்தரை வெப்புநோய் போக்க அனுமதிக்க வேண்டினார். மன்னனும் அதற்கு இசைந்து, சம்பந்தரால் இந்நோய் தீர்ந்தால், தாம் சமணம் விட்டு சைவம் சார்வேன் எனவும் கூறினான். சம்பந்தரும்,*

*மந்திரமாவது நீறு...*
*(இரண்டாம் திருமுறை : 66)*

*எனத் தொடங்கும் பதிகம் பாட, நோய் தீர்கிறது. அவ்வளவில் தோல்வியை ஒப்புக்கொள்ளாத சமணர்கள், அனல்வாதம் புனல்வாதம் முதலான போட்டிகளைத் தொடர்ந்து அதிலும் தோற்றப்பின் கழுவில் ஏறினர். இதன்பின் மன்னரும், நாட்டு மக்கள் அனைவருமே சைவத்தைத் தழுவினர்; சமணம் அழிந்து சைவம் நிலைப்பெற்றது (ஞானசம்பந்தன், 1999, ப. 110). இவ்வாறு சமயத்தையும் நாட்டையும் மீட்டும் காத்தும் உய்வுபெற்ற அரசியாரைச் சம்பந்தர்,*

*மங்கையர்க் கரசி வளவர்கோன் பாவை*
*வரிவளைக் கைம்பட மானி*

*பங்கயச் செல்வி பாண்டிமா தேவி*
*பணிசெய்து நாடொறும் பரவ...*

*(மூன்றாம் திருமுறை : 120)*

எனப் பாடிப் பரவியது பெருமைக்குரியது.

மேலும், பாண்டிய நாட்டில் மன்னனும் சமணர் வயப்பட்டுச் சமணம் ஓங்கியிருந்தபோதும், அரசியார் சைவத்திலிருந்து பிறழவில்லை; நாட்டில் சிவச்சின்னங்கள் பயன்படுத்தப்படுவதற்குத் தடை ஏற்பட்டபோதும் திருநீற்றை வெளிப்படையாக அணிந்து சைவராகவே வாழ்ந்தவர் இவர். இதை மன்னரும் தடுத்ததாகத் தெரியவில்லை. இவ்வாறு, தமது சமயத்தைக் காத்த அதேவேளை, தம் கணவனது ஆணைக்கும் ஆட்சிக்கும் இழுக்கு வராதவாறு வாழ்ந்தவர் இவர். ஆக, மதமாற்றம் பற்றி கணவரோடு போராடாமல் வேற்றுமைகளை மிகைப்படுத்தாமல் ஒத்து வாழ்ந்த அதே சமயம், தக்க தருணம் வந்தபோது மன்னனையும் சைவத்தைத் தழுவச் செய்து சைவத்தை மீட்டு நிலைப்பெறச் செய்த அரசியாரின் விவேகமும் செயலாற்றலும் நாம் என்றும் எண்ணிப் போற்றத்தக்கது (அரசு, 1955, ப. 26). இச்சிறப்புக் குறித்தே சேக்கிழாரும்,

*மங்கையர்க்குத் தனியரசி, எங்கள் தெய்வம்*
*...................................................................*
*தென்னர்குலப் பழிதீர்த்த தெய்வப்பாவை...*

*(பெரிய புராணம் – மங்கையர்க்கரசி அம்மையார் புராணம் : 1)*

எனப் போற்றியுள்ளார்.

## 2.2 துறவறத்தில் திருத்தொண்டாற்றியவர்கள்

சைவசமய பெண் பெருமக்களுள் துறவறத்தில் திருத்தொண்டாற்றியவர்கள் எனப் புகழ்பெற்றவர்களில் புனிதவதியார் மற்றும் திலகவதியார் சிறப்பிடம் பெற்றுள்ளனர்.

### 2.2.1 புனிதவதியார்

அறுபத்து மூன்று நாயன்மார்களில் புனிதவதியார் என்னும் காரைக்கால் அம்மையாரும் ஒருவர் ஆவார். காரைக்கால் என்ற ஊரில் தனதத்தன் என்ற செல்வவணிகருக்கு மகளாவார். மணப்பருவம் அடைந்ததும் நாகப்பட்டினத்திலிருந்த நிதிதனபதி என்பவன் மகன் பரமதத்தனுடன் திருமணம் செய்துகொண்டார்.

#### 2.2.1.1 இல்லறம்

புனிதவதியார் காரைக்காலில் தனது இல்வாழ்க்கையைத் தொடங்கினார். பரமதத்தன் வாணிபத்தில் சிறந்து விளங்கினான். சிறுவயது முதல் சிவபக்தியில் திளைத்திருந்த புனிதவதியார், அடியார் பணியிலும் ஈடுபட்டிருந்தார். அமுது வழங்குதல் மற்றும் பொன்பொருள் வழங்குதல் ஆகியவை அவரது அடியார் பணிகளாக விளங்கின.

#### 2.2.1.2 மாம்பழம் கிடைத்தது

பரமதத்தன் தன்னிடம் காரியமாக வந்தவர்கள் கொடுத்த இரண்டு மாம்பழத்தை வீட்டிற்குக் கொடுத்தனுப்பினான். புனிதவதியார் அதில் ஒன்றை வீட்டிற்கு வந்த சிவனடியாருக்குச் சாதத்துடன் பரிமாறுகிறார். கணவன் வீடு திரும்பியதும் உணவு பரிமாறுவதற்காக மற்றொரு பழத்தை வைக்கிறார்.

***2.2.1.3*** இன்னொரு பழம்

*மதிய உணவிற்கு வீட்டிற்கு வந்த பரமதத்தனுக்குப் பலவகை பதார்த்தங்களுடன் அன்னம் பரிமாறிய புனிதவதியார், சிவனடியாருக்குப் படைத்தது போக, மீதமிருந்த ஒரு மாங்கனியை அவருக்கு வைத்தார். அவர் தன் கணவனுக்கு உணவு பரிமாறும்போது அவன் இன்னொரு பழத்தையும் கேட்கிறான். புனிதவதியார் திருவருளால் வேண்டி பழம் கிடைத்தது. மகிழ்ச்சியடைந்த அம்மையார் அதனைக் கணவனுக்குப் படைத்தார். முதலில் வைத்த மாங்கனியைவிட இது அதிக சுவையுடன் இருக்கவே சந்தேகமடைந்த பரமதத்தன், காரணம் கேட்டார். புனிதவதியார் நடந்ததைக் கூறினார். ஆனால், கணவனோ, சிவபெருமான் கனி தந்தது உண்மையானால், மீண்டும் ஒரு கனியை வரவழைக்கும்படி கூறினான். அம்மையார் சிவபெருமானை வணங்க, மீண்டும் ஒரு மாங்கனி கிடைத்தது. பின்னர், அந்தப் பழம் மறைந்தது.*

***2.2.1.4*** கணவன் பிரிவு

*வியந்த பரமதத்தன் பயங்கொண்டு புனிதவதியாரைத் தெய்வமாய் எண்ணி பிரிந்தான். பின்னர், பரமதத்தன் பாண்டிய நாடான மதுரை மாநகர் சென்று வேறொரு பெண்ணை மணம் முடித்து அங்கேயே வாழ்ந்தான். சிலகாலம் கழித்து அவனுக்குப் பிறந்த பெண்குழந்தைக்குப் 'புனிதவதியார்' என்ற திருப்பெயரையே வைத்தான்.*

***2.2.1.5*** கணவனைச் சென்று காணுதல்

*புனிதவதியார் உறவினர் வழி பரமதத்தன் இருக்கும் இடத்தைக் கேள்விப்பட்டு, கணவனைக் காணச் சென்றார். கணவன், புனிதவதியாரைத் 'தெய்வம்' என்று வணங்கினான்; அவ்வாறு வினவிய சுற்றத்தாரைப் பார்த்து, இவர் மானுடப் பிறவி அல்லர், நன்மையும் பெருமையும் பொருந்திய தெய்வமேயாவர் என்பதை நான் அறிந்து நீங்கி வந்தபின்பு, பெற்ற இக்குழந்தைக்கும் அவர் பெயரையே இட்டேன், ஆதலால் அவருடைய அழகிய திருவடிகளை வணங்கினேன்; நீவிரும் அவ்வாறே வணங்குதல் செய்மின் என்றான் பரமதத்தன். இதனை,*

*மற்றவர் தம்மை நோக்கி*
*மானுடம் இவர்தாம் அல்லர்*
*நற்பெருந் தெய்வ மாதல்*
*நானறிந் தகன்ற பின்பு*
*பெற்றஇம் மகவு தன்னைப்*
*பேரிட்டேன் ஆத லாலே*
*பொற்பதம் பணிந்தேன் நீரும்*
*போற்றுதல் செய்மின் என்றான்.*

*(பெரிய புராணம் – காரைக்கால் அம்மையார் புராணம் : 47)*

*என்ற பெரிய புராணப் பாடல் சுட்டுகிறது.*

***2.2.1.6*** பேய் வடிவம் பெற்றார்

*புனிதவதியார் தம் கணவனேயன்றி வேறு ஆடவனை நினையாது, தானும் மற்ற ஆடவன் மனதில் புகாது இருத்தலே கற்பு என்பதால் மானிடப்பிறவி தேவையில்லை என ஈசனிடம் கூறி பேய் வடிவம் வேண்டினார். பேய் வடிவம் பெற்றதும் சிவபெருமானைப் போற்றி 'அற்புதத்திருவந்தாதியும்' 'இரட்டை மணிமாலையும்' பாடி கைலாயம் சென்றார்.*

***2.2.1.7*** *கைலாய யாத்திரை*

*வட திசையிலுள்ள தேசங்களை எல்லாம் மன வேகத்தினும் விரைந்து சென்று, மாலையென மலரும் கொன்றை மாலையை அணிந்தும், கையில் சூலத்தை ஏந்தியும், நின்றருளுகின்ற சிவபெருமான் வீற்றிருக்கும் பேரொளிப் பிழம்பாக விளங்கும் திருக்கயிலையின் அருகே சென்ற அம்மையார், மேலும் காலால் நடந்து செல்வது சரியல்ல என, தலையால் நடந்து சேருகிறார்.*

***2.2.1.8*** *பார்வதியும் வியக்கிறார்*

*வரும் அம்மையாரை நோக்கிய பார்வதி அம்மையாரும், தம் திருவுள்ளத்தில் வியப்புக் கொண்டருளினார். இவரின் பக்தி வலிமையை அம்பிகையும் புகழ்கிறார்.*

***2.2.1.9*** *அம்மையே என்றார்*

*பனிதவதியாரை நோக்கி ஈசன் 'அம்மையே!' என அழைக்க, அம்மையார் ஈசன் திருவடியை வணங்கினார். ஈசன் வரம் கேட்க, அம்மையார் தாம் இறைவனிடத்து 'இறவாத இன்ப அன்பு வேண்டும்' என்கிறார். இதனை,*

*இறவாத இன்ப அன்பு*<br>
*வேண்டிப்பின் வேண்டு கின்றார்*<br>
*பிறவாமை வேண்டும் மீண்டும்*<br>
*பிறப்புண்டேல் உன்னை என்றும்*<br>
*மறவாமை வேண்டும் இன்னும்*<br>
*வேண்டும்நான் மகிழ்ந்து பாடி*<br>
*அறவாநீ ஆடும் போதுன்*<br>
*அடியின்கீழ் இருக்க என்றார்.*

*(பெரிய புராணம் - காரைக்காலம்மையார் புராணம்: 60)*

*என சேக்கிழார் மொழிகிறார்.*

***2.2.1.9*** *திருவாலங்காட்டில்*

*ஈசனின் திருவருள்படி, திருவாலங்காட்டிற்குத் தலையாலே நடந்து அப்பெருமான் திருநடனம் கண்டு, ஏனைய திருப்பதிகம் பாடி இறைவனின் திருவடி அணைகிறார்.*

*புனிதவதியாரைப் பொருத்தவரை கணவனே கண்கண்ட தெய்வமாகப் போற்றியுள்ளார். இவர் தன் கணவனிடம் பொய்கூறல் என்ற பெருங்குற்றத்தை நிகழ்த்தவில்லை. இதனிடையே, சிவ பக்தியிலும், சிவனடியார்களுக்குத் தொண்டு புரிவதிலும் சிறந்து விளங்கியுள்ளார்.*

***2.2.2 திலகவதியார்***

*சைவசமய பெண்களுள் துறவறத்தில் திருத்தொண்டாற்றியவர்களில் திலகவதியாரின் பங்கும் அளப்பரியது.*

#### *2.2.2.1 பிறப்பு*

*திலகவதியார் திருமுனைப்பாடி நாடு, திருவாமூர் தளத்தைச் சேர்ந்த வேளாண்மைகுடி புகழனார், மாதினியாரின் மூத்த மகளாவார். இவர் திருநாவுக்கரசருக்குத் தமக்கையாவார் (ஆறுமுக நாவலர், 2000, 208).*

#### *2.2.2.2 திருமணமும் தடைப்பட்டதும்*

*திலகவதியாருக்குப் பன்னிரண்டு வயதிலே கலிப்பகையாருக்கு(சேனாதிபதி) திருமணம் செய்துவைக்கப் பேசினர். மன்னன் ஆணைப்படி திருமணத்திற்கு முன் கலிப்பகையார் போர் புரிய வடப்புலம் சென்றார். திலகதியாரின் தந்தை புகழனார் பிணியால் இயற்கை எய்த மாதினியாரும் உயிர் துறந்தார். போருக்குச் சென்ற கலிப்பகையாரும் வீரமரணம் எய்தினார் (மேற்படி, 208-209).*

#### *2.2.2.3 தவநெறி ஏற்று துறவுக்கொள்ளுதல்*

*பெற்றோர் தன்னைக் கலிப்பகையாருக்குத் திருமணம் செய்து கொடுக்க இசைந்தமையால் திலகவதியார், 'நான் அவருக்கே உரியவள் ஆனேன்?' என அவருயிருடன் தன்னுயிரைச் சேர்க்க முனைந்தார். மருள்நீக்கியாரும் 'உயிர்விடுவேன்' எனக் கூற, தம் தம்பிக்காக உயிர் தாங்கி, மனையில் தவம் புரிந்தார். பின்னர், திருப்பணி செய்தார்; கோயிலைத் தூய்மைப்படுத்தி மலர்மாலை தொடுத்துத் திருப்பணிகள் செய்தார்(மேற்படி, 209).*

#### *2.2.2.4 மதமாற்றம் கொண்ட தம்பியை மீட்டு சைவத் தொண்டாற்றினார்*

*குடும்பத்தில் ஏற்பட்ட இழப்புகளால் மனம் நலிவடைந்திருந்த மருள்நீக்கியார் சமணம் சேர்ந்தார். திலகவதியார் தம்பியாரை மீட்டருள நோன்பு பூண்டு ஈசனை வேண்டினார். இறைவனும் சூலைநோய் ஏற்படுத்தி, திலகவதியை வந்தடைய செய்தார். சமண மடத்திற்குத் தாம் சென்று தம்பியைக் காண மறுக்கிறார். மருள்நீக்கியார் தம்மிடம் வரவே, திருவைந்தெழுத்து ஓதி திலகவதியார் திருநீறு அளிக்க அதை பெற்று, இறைவனை வணங்கி திருப்பதிகம் பாடுகிறார். இறைவன் 'நாவுக்கரசு' எனப் பெயர் சூட்டுகிறார்(மேற்படி, 211-213).*

*உடன்பிறந்தவர்களை நல்வழிப்படுத்துவது மூத்தப் பிள்ளைகளின் கடமை என்பதைத் திலகவதியார் உணர்த்துகிறார். நாவுக்கரசரைச் சமணத்திலிருந்து மீட்டு, சைவத்திற்குத் தொண்டாற்றிய பெருமை இவரையே சேரும். மேலும், கற்பின் திண்மையையும் திலகவதியார் உணர்த்துகிறார்.*

### *2.3* **இல்லறத்திலேயே நல்லறம் புரிந்தவர்கள்**

*இளையான்குடி மாறநாயனாரின் மனைவியார், அப்பூதியடிகளின் மனைவியார் மற்றும் சிறுதொண்ட நாயனாரின் மனைவியார் ஆகியோர் இல்லறத்திலேயே நல்லறம் புரிந்தவர்களுள் சிறப்பிடம் பிடித்துள்ளனர்.*

#### *2.3.1 இளையான்குடி மாறநாயனாரின் மனைவியார்*

*இளையான்குடி மாறநாயனார் என்பவர் சைவ சமயத்தவர்களால் பெரிதும் மதிக்கப்படும் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவர் ஆவார். இவரின் மனைவியார் இல்லறத்தில் நல்லறம் புரிந்தவர்களில் சிறப்புமிக்கவராகத் திகழ்கிறார்.*

***2.3.1.1 மாறனார் மாண்பு***

*இளையான்குடி, வேளாளர் குலத்தில் பிறந்தவர்தான் மாறனார் ஆவார். உழவுத்தொழிலினால் பெருஞ்செல்வமும் மிகுந்த சிவபக்தராகவும் திகழ்ந்தார்(மேற்படி, 130).*

***2.3.1.2 அடியார் பூசை***

*இளையான்குடி மாறநாயனார் சிவனடியாருக்குப் பாதபூசை செய்தலும் இன்னமுது அளித்தலுமேயே தமது வாழ்க்கை குறிக்கோளாகக் கொண்டிருந்தார். தம் இல்லத்திற்கு வரும் சிவனடியார்களைக் கைகூப்பி வணங்கி, இன்மொழிகளைக் கூறி வரவேற்று, அவர்களுக்கு அமுதளிப்பார்(மேற்படி).*

***2.3.1.3 செல்வ செழுமை***

*சிவன் அடியார்களுக்குத் திருவமுது அளித்தலையே திருப்பணியாகக் கொண்டிருந்த மாறனார் செல்வ செழுமையுடன் வாழ்ந்தார். அடியார் பூசையால் செல்வவளம் பெருக, குபேரன் போல் வாழலானார்(மேற்படி, 131).*

***2.3.1.4 இறைவன் எண்ணம்***

*செல்வம் குன்றிய நாளும் அடியார் தொண்டில் மேம்பட்டவர் என்னும் உண்மையினை உலகத்தார்க்கு மெய்ப்பிக்க இறைவன் திருவுள்ளம் கொண்டார். இதனை உணர்த்தும்பொருட்டு இறைவன் மாறனாரைச் செல்வம் குன்றி வறுமையுறச் செய்தார்(மேற்படி).*

***2.3.1.5 வறுமையில் செம்மை***

*மாறனாரிடம் செல்வம் சுருங்கியபோதும் மனம் சுருங்காது, அடியார் பூசையில் மேலும் முதிர்ந்த கொள்கையிரானார்; தம்மிடமிருந்த நிலங்களை விற்றும், பிறரிடம் கடன் வாங்கியும், அடியார்க்கு அமுதளிக்கும் திருப்பணியைக் கைவிடாது செய்துவந்தார்(மேற்படி).*

***2.3.1.6 இறைவன் சோதனை***

*ஒரு நாள் நள்ளிரவு பொழுதிலே, இறைவனே சிவனடியாராக மாறனாரின் மனைக்கு எழுந்தருளினார். மாறனார் தமக்கே அன்று உணவு இல்லாதபோதும் அடியாரை முழுமனதுடன் உபசரித்தார் (மேற்படி).*

***2.3.1.7 விருந்தோம்ப மனைவியிடம் கேட்டல்***

*தன் மனைக்கு வருகை புரிந்திருந்த சிவனடியாருக்கு அமுது படைக்க மாறனார் விருப்பம் கொண்டார். அவர் விருந்தோம்ப தன் மனைவியிடம் கேட்டார். மனைவியாரும் விருப்பம் கொண்டார்(மேற்படி).*

***2.3.1.8 மனைவியின் ஆலோசனை***

*அடியார்க்கு உணவளிக்க வீட்டில் எதுவுமில்லை என மாறனாருக்கு வருத்தம் மிகுந்தது. சிவனடியாருக்கு அமுது படைக்க விரும்பிய மாறனார் பக்கத்து வீட்டில் உணவு கேட்க அவர்கள் கொடுக்கவில்லை. இதற்கிடையில் பகலில் விதைத்துவிட்டு வந்த முளை நெல்லை வாரிக் கொண்டு வர மாறனாரின் மனைவி ஆலோசனை கூறினார்(மேற்படி, 131-132)..மாறனாருக்கு நிகழ்ந்த இடற்பாட்டிற்கு நல்ல தீர்வு சொல்லும் நல்லாளாக அவரின் மனைவி விளங்கினார். கணவனுக்கு ஆலோசனை கூறும் மந்திரியாக மாறனாரின் இல்லாள் செயல்பட்டார்.*

***2.3.1.9 நள்ளிருளில் வயல் செலுத்துதல்; வயல் கொணர்தல்***

*மனைவியின் ஆலோசனையை ஏற்ற மாறனார் நடுநிசியில் கூடையைத் தலையில் கவிழ்த்துக் கொண்டு வயலுக்குச் சென்றார்; காலில் வழி தடவி, வயல் சென்று முளைநெல்லை வாரிக்கொண்டு வந்தார்(மேற்படி, 132).*

***2.3.1.10 அடிசில் ஆக்குதலும் கறியமுது சமைத்தலும்***

*வாயிலில் தமது கணவனை எதிர்பார்த்து நின்ற மனைவி அதைப் பெற்றார். பின்னர், அடுப்பு எரிக்க விறகில்லாமல் கூரையை மாறனார் பிரித்துக் கொடுக்க அவரும் அதனை விறகாக்கிச் சமைத்தார். பின், கறிக்கு வழிகேட்க மாறனாரும் பறித்து வந்த குழி நிரம்பாத குப்பைக்கீரையைப் பதமாகக் கறியாக்கினார் மாறனாரின் மனைவி(மேற்படி).*

***2.3.1.11 அடியாரைத் துயில் எழுப்புதல்***

*மாறனாரின் மனைவி சிவனடியாருக்கு விருந்தோம்பல் படைக்க உணவைத் தயார் செய்ததும் அவ்வடியாரைத் துயில் எழுப்பினார். சிவனடியாருக்கு மனநிறைவுடன் அமுது படைத்தனர் கணவனும் மனைவியும்(மேற்படி).*

***2.3.1.12 இறைவன் சோதியாகத் தோன்றுதலும் இடபாருடகாட்சியும்***

*அப்பொழுது அடியாராக எழுந்தருளிய பெருமான், சோதிப்பிழம்பாய் எழுந்து தோன்றினார். அது கண்டு மாறனாரும் மனைவியும் திகைத்து நின்றனர்(மேற்படி).*

***2.3.1.13 சிவலோகப் பதவி பெறுதல்***

*சிவபெருமான் உமாதேவியாருடன் எருதின் மேல் தோன்றி, "அன்பனே! அன்பர் பூசை அளித்த நீ, உன் மனைவியோடும் என் பெரும் உலகமாகிய சிவலோகத்தினை அடைந்து பேரின்பம் அனுபவித்திருப்பாயாக" என்று அருள் செய்து மறைந்தருளினார். இருவரும் சிவலோகப் பதவியைப் பெற்றனர்(மேற்படி, 133).*

*விருந்தோம்பல் தமிழர்ப் பண்பாடுகளுள் ஒன்று. இதற்குப் பொருட்செல்வம் இல்லாவிடினும் உளவளம் இருக்குமாயினும் சாத்தியமாகும். படைக்கப்படும் உணவு முக்கியமன்று, மாறாக செலுத்தப்பெறும் அன்பே முக்கியம். தலைவன் குழம்பித் தீர்வு காண முடியாத சூழ்நிலையிலும் நல்ல தீர்வு காண வழி சொல்கின்றவள்தான் நல்ல துணைவி; நல்ல மனைவி; நல்ல வேந்தர்கேற்ற நல்லமைச்சன். அவர் தனது கணவனுக்கு ஆலோசனை கூறும் ஒரு தலைசிறந்த மந்திரியாகத் திகழ்கிறார்.*

***2.3.2 அப்பூதியடிகள் மனைவியார்***

*சிவத்தொண்டர்களாக வாழ்ந்த அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவர்தான் அப்பூதியடிகளாவார். இவரின் மனைவியார் இல்லறத்தில் நல்லறம் புரிந்தவர்களில் சிறப்புமிக்கவராக விளங்குகிறார்.*

***2.3.2.1 அப்பர் மேல் மிகுதியான பற்று***

*அப்பூதியடிகள் திங்களூரில் பிறந்த அந்தணர் குலத்தவராவார். இவர் சிவபக்தியிலும் அடியார் தொண்டிலும் சிறந்தவர். இவர் திருநாவுக்கரசரின் சிவத்தொண்டினை அறிந்து அவர்பால் அதீத பக்தி கொண்டார். அதனால், மக்களுக்கு அன்னம் படைத்தல், சத்திரம் அமைத்தல், நீர் கொடுத்தல் போன்ற எல்லாப் பணிகளையும் அப்பரின் பெயரிலே செய்து வந்தார்(மேற்படி, 248).*

***2.3.2.2 அப்பர் செவியுற்று நாயனார் வீட்டில் வருகை***

*தம் பெயரில் செய்யப்பெறும் திருப்பணிகளை அறிந்த திருநாவுக்கரசர் அப்பூதியடிகளைக் காண இல்லம் சென்றார். அப்பூதியடிகள் வந்தவரை அறிந்து அமுது செய்தருள வேண்டினார்(மேற்படி, 249-250).*

***2.3.2.3 அமுது உண்ண உடன்படுதல்; பாலகனைப் பாம்பு தீண்டுதல்***

*அப்போது அடிகளாரின் மனைவியார் முழு விருப்பத்துடன் தன் மூத்த மகனைத் தோட்டத்திற்குச் சென்று நல்ல குருத்தியிலை வெட்டி வரப் பணிக்கிறார். அங்குப் பாம்பு ஒன்று அவன் கையைத் தீண்ட கையை உதறி பாம்பை விழுத்திவிட்டு மனைக்கு வந்து குருத்தியிலையைக் கொடுத்தவன் உடனே உயிரிழந்தான். அமுதுண்ண வந்த அப்பர் உண்மை நிலையை அறிந்து 'ஒன்று கொலாம்' எனத் தொடங்கும் பதிகம் பாடுகிறார்(மேற்படி, 251-252).*

*2.3.2.4 மாண்டவன் மீண்டான்; திருவமுது செய்தார்*

*இறை அருளால் பாலகன் உறக்கம் நீங்கி விழித்தவன் போல எழுந்து புனித நீறு பெற்றணிந்தான். மீண்டவனை எண்ணி மகிழாது இன்னும் அப்பர் அமுதுண்ணவில்லையே என அடிகளும் மனைவியாரும் வருந்தினர். குறிப்பு உணர்ந்த அப்பர் அவர்கள் இல்லம் சென்று திருவமுது செய்தருளினார்(மேற்படி, 252).*

*அப்பூதியடிகளின் அடியார் தொண்டிற்குப் பக்கபலமாக இருந்த மனைவியாள் மாண்பு போற்றத்தக்கது. மேலும், தாய் ஏவ உடனே சென்று இலை வெட்டியதும், இன்னும் மேலாக, பாம்பு தீண்டியதும் அலறி ஓடாது தான் மயங்கிவிழும் முன் இலையைத் தாயிடம் ஒப்படைக்க ஓடிய சிறுவனின் வளர்ப்பு அப்பூதியடிகளாரின் துணைவியார் சிறப்பைப் பறைசாற்றுகிறது. பிள்ளைகளுக்கு ஆர்வமில்லாது போனாலும் அவ்வாறு விட்டுவிடாது அவர்களுக்குத் தாய் சொல்லைத் தட்டாதே, பெரியோரைப் பேணல் மற்றும் சமயத்தில் ஈடுபாடு ஆகியவற்றை அறிவுறுத்தி வளர்ப்பதில் பெரும் பங்காற்றிய மாண்பு அப்பூதியடிகளின் மனைவியாரையே சேரும். இதனுடன் அப்பூதியடிகளின் மனைவியார் தன் மகன் உயிரிழந்த போதிலும் அலறிடல் இல்லாது, பொறுமை காத்து அடியார் சேவைக்கே முதன்மையளித்தார்.*

***2.3.3 சிறுதொண்ட நாயனாரின் மனைவியார்***

*சைவ சமயத்தவர்களால் போற்றப்படும் அறுபத்து மூன்று நாயன்மார்களில் சிறுதொண்ட நாயனார் ஒருவர். இவரது இயற்பெயர் பரஞ்சோதியார். இவர் திருச்செங்காட்டங்குடியில், மந்திரி குலத்தில் தோன்றியவர். இந்நாயனார் பல்லவ வேந்தனுக்குப் படைத்தலைவராகப் பணியாற்றியவர். அக்காலத்தில், வாதாபி நகர அரசனைப் போரில் வென்றவர் இவர். தமது அரசன் இவரது சிவத்தொண்டின் மாண்பையறிந்து இனி அடியார் தம் விருப்பப்படி சிவத்தொண்டாற்ற உத்தரவு வழங்கினார். இவரது மனைவியார் திருவெண்காட்டு நங்கையாவார். இவர்களது ஒரே மகன் சீராளதேவர். இறைவன் திருமுன்பு சிறியவராய் விளங்கியதால் இவர் சிறுதொண்ட நாயனார் என விளங்கினார்(மேற்படி, 361-363).*

***2.3.3.1 இறைவன் சோதனை; பைரவராக வருதல்***

*சிறுதொண்ட நாயனாரும் மனைவியாரும் அடியார்க்கு அமுது படைத்து, பின் உண்ணும் நெறியைக் கடைப்பிடித்து வந்தனர். இதனையறிந்து இறைவன் ஒரு நாள் வயிரவராய் இவர்களது மனைக்கு எழுந்தருளினார்(மேற்படி, 363-364).*

***2.3.3.2 பிள்ளைக்கறி கேட்க, தாயும் உடன்பட்டார்***

*வயிரவராய் வந்தவர் தனக்குப் பிள்ளைக்கறி வேண்டும் எனவும், அப்பிள்ளை குடிக்கு நல்ல ஒரு மகனாக இருக்க வேண்டும் எனவும் கேட்டார். சிறுதொண்ட நாயனாரும் மனைவியாரும்*

*அக்கோரிக்கைக்கு இணங்கினர். தம் ஒரே மகனைத் தாய் பிடிக்க, தந்தை அரிய இருவரும் சிறு துளி வெறுப்புக் கொள்ளாது மனமுவந்து அமைத்த கறி தாம் உண்பவ எனக் கூறினர். இத்தம்பதியினர் ஒத்த உள்ளத்தினராய் கூறியவாறு அவ்வரிய செயலைச் செய்தனர். அன்னமும் திருவமுதும் படைத்த மனைவியார் ஒதுக்கிய தலை இறைச்சியும் தமக்கு வேண்டும் என வினவ, தாதியார் சந்தன நங்கையார் அதையறிந்து தாம் பாகம் செய்து வைத்ததைக் கொடுக்கிறார். வெண்காட்டு நங்கையார் அதனை முகமலர்ந்து படைக்கிறார். வயிரவர் தாம் தனியே உண்ணோம் என்று கூற, சிறுத்தொண்டரும் உடன் உண்ண இறங்குகிறார். வயிரவர் திருத்தொண்டர் மகனையும் உடன் உண்ண அழைக்க, தம்பதியர் தம் மகனை வெளியே சென்று அழைத்து பாசாங்கு செய்கின்றனர். அப்போது, இறைவன் அருளால் சீராளதேவன் பள்ளியிலிருந்து ஓடிவந்தான். தாயார் அவனைத் தழுவி இருவரும் அடியார்க்கு அமுது செய்ய உள்ளே செல்கின்றனர். பைரவர் மறைந்தார் மூவரும் வருந்தினர். இறைவன் ஆகாயத்தில் தோன்றி அவர்களுக்கு முக்தி அளித்தார்(மேற்படி, 364-371).*

*கணவரின் கொள்கைக்கேற்ப துணையாய் ஒத்த கருத்தினராய் அவரோடு இணைந்து வாழ்ந்து, கணவன் கொள்கை மாறாது இருப்பதற்கு வேராகத் திகழ்ந்தவர் வெண்காட்டு நங்கை. மேலும், கறி சமைக்க தமது ஒரே மகனைத் தாய் பிடிக்க, தகப்பன் வெட்டியபோதும் ஐந்தே வயது நிரம்பிய அவன் அலறியதாகவோ திமிறியதாகவவோ தெரியவில்லை. பெற்றோர் அடியாருக்கு உணவளித்த பின்பே தான் உண்பர் என அறிந்த அக்குழந்தை, பெற்றோர் நலன் கருதிய மாண்பு வெளிப்படுகிறது. வீட்டுப் பணிப்பெண் அவர்களை மிஞ்சிய நிலையில் குறிப்புணர்ந்து தலைக்கறி சமைத்து வைத்த மாண்பும் வெளிப்படுகிறது. தாய்-சேய் பிரிவில் தாய் படும் துயரே பெரிது; இருப்பினும் கணவன் கொள்கையைக் காக்க தம் துயர் எண்ணாது பிள்ளைப் பற்றை நீக்கி செயல்பட்ட நங்கை இவ்வம்மையாராவார்.*

## **3.0** *தொகுப்புரை*

*கணவனையும் நாட்டையும் விவேகமாகத் திருத்திய மங்கையர்கரசி சைவம் தழைக்க பெருந்தொண்டு புரிந்தவராவார். புனிதவதியார் (காரைக்காலம்மையார்) சிறு பருவத்திலேயே இறைவன் திருவடியைப் போற்றியவர். அடியார்க்கு அமுது செய்தலில் மேம்பட்டிருந்தார். இவர் கணவனிடம் பொய் சொல்லக்கூடாது என நேரிய பண்பினர். கணவனோடு இல்லறம் நடத்த வாய்ப்பு இன்றி போக, எடுத்த உடலும் அழகும் வேண்டாம் என்று எலும்பு உடல் பெற்று முழுத்துறவுநிலை அடைந்தார் அம்மையார். புனிதவதியார் இறைப்பணியில் முழு அர்ப்பணிப்பையும் அளித்தார். இதனுடன் பதிகம் பாடி, சைவத்திற்கு அரும்பணி ஆற்றியுள்ளார் காரைக்காலம்மையார்.*
*தொண்டுநெறியில் மேம்பட்டவர் திலகவதியார். இவர் தம்பிக்காக உயிர் வாழ்ந்து மதமாற்றம் தடுத்து, சைவம் தழைக்கச் செய்தவர். திலகவதியார் சிவநெறியில் நிற்பவர்; நன்மைநெறி அறியாதார் (சமணர்) இடத்திற்குச் செல்வது கூடாது என்பதையும் உலகுக்கு எடுத்துக்காட்டியவர்.*

*இல்லறத்தில் நல்லறம் புரிந்தவர்களுள் ஒருவர்தான் இளையான்குடி மாறனாரின் மனைவியார். 'மனைவி ஒரு மந்திரி' எனும் தொடருக்கு நிகரான செயல்திறன் உடையவர்தான் இவர். மேலும், இவர் வறுமையிலும் விருந்து அறம் வழுவாத பண்பாட்டினர். இன்னமுது கொடுத்து விருந்தோம்பும் வாழ்க்கையே மேம்பட்டது எனும்படி விளங்கியவர் இவர்.*

*அப்பூதியடிகளின் மனைவியார் மனையறம் காக்க தன் துயர் மறைக்கும் உயர் குலமகளாவார். மக்கள் தொண்டே மகேசன் தொண்டு எனும்படியால் தம்மைத் தேடி வந்தவருக்கு இன்முக வரவேற்பு அளிக்க இவர் தவறியதே இல்லை. உணவளித்து உபசரிக்கும் இல்வாழ்வோர் உயர்பண்பிற்குச் சான்றாவார். இதற்கு நிகரானவரே அப்பூதியடிகளின் மனைவியார்.*

*சிறுதொண்ட நாயனார் மனைவி மனைகடன் வேண்டி செயற்கரிய செய்யும் சீரிய பண்பாடு உடையவராவார். விருந்தினர் முகம் மலருதலைக் காண விரும்பி குழந்தையை அரிய கொடுத்த குலமகள் இவர்; தமது செயற்பாட்டை மனமுருகச் செய்யும் அருமையுடையவர். அடியார் தொண்டில் உச்சத்தில் ஒளிரும் பாவைவிளக்கான இவர் பைரவ நெறியைக் கொண்டவராகத் திகழ்கிறார்.*

## **4.0** *முடிவுரை*

*இன்றைய பெண்களுக்குச் சமுதாயக் கடப்பாடு உண்டு. திருமுறை காட்டும் தகைசால் பெண்கள் சமயத் தொண்டு செய்தல் (அடியார் சேவை), சமய மாற்றத்தை எதிர்த்துப் போராடி காத்தல் மற்றும்*

குடும்ப நலன் பேணுதல் போன்ற நாட்டிற்கும் வீட்டிற்கும் சமயத்திற்கும் செம்பணி புரிந்துள்ளனர். சமுதாயக் கடப்பாடு முழுமைபட செய்தோரே வீடும் நாடும் போற்றும் நன்மக்களாவர். இத்தகு சிறப்புக்குரிய மகளிரையே,

*மங்கையராய் பிறப்பதற்கே*
*மாதவம் செய்திட வேண்டுமம்மா...*

எனப் பாடி பெருமை செய்தார் கவிமணி. குடும்பப் பெருமையைக் காப்பவள் மனைவி என்பதைத் திருவள்ளுவரும்,

*மனைத்தக்க மாண்புடைய ஆகித்தற் கொண்டான்*
*வளத்தக்காள் வாழ்க்கைத் துணை*

(திருக்குறள்: 51)

எனும் குறளில் சுட்டியிருப்பது என்றும் போற்றுதலுக்குரியது.

**துணைநூல் பட்டியல்**

அரசு. (1995). *பெரியபுராண வசனம் அல்லது திருத்தொண்டர் வரலாறு (பெரியபுராண உரைநடை).* சென்னை: திருநெல்வேலித் தென்னிந்திய சைவ – சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட். மறுபதிப்பு.

ஆறுமுகம் நாவலர். (2000). *பெரியபுராண வசன காவியம்.* தஞ்சாவூர்: சரசுவதி மகால் நூலகம். இரண்டாம் பதிப்பு.

இராசமாணிக்கனார், ம. (1960). *பெரியபுராண ஆராய்ச்சி.* சென்னை:பழனியப்பா பிரதர்ஸ். இரண்டாம் பதிப்பு.

கிருஷ்ணன். (1999). *அருள்பெற்ற நாயன்மார்கள்.* சென்னை: நர்மதா பதிப்பகம். மறுபதிப்பு.

குழந்தை (புலவர்) உரை. (1962). நீதிக்களஞ்சியம்: 923. ஈரோடு: இளங்கோ புத்தகசாலை. முதற்பதிப்பு.

சிவபாத சுந்தரம். (1989). *சேக்கிழார் அடிச்சுவட்டில் அறுபத்துமூவர் வரலாறும் யாத்திரையும்.* சென்னை: வானதி பதிப்பகம். இரண்டாம் பதிப்பு.

ஞானசம்பந்தன், அ. ச. (2000). *சேக்கிழார் பெருமான் அருளிய திருத்தொண்டர் புராணம் (பெரிய புராணம்).* சென்னை: கங்கை புத்தக நிலையம்.

ஞானசம்பந்தன், அ. ச. (1999). *பெரிய புராணம் – ஓர் ஆய்வு.* சென்னை: கங்கை புத்தக நிலையம்.

*தமிழ் பக்தி இலக்கிய மாநாட்டு மலர்.* (2010). பக்தி இலக்கியம்: வாழ்வின் ஒளிவிளக்கு. கோலாலம்பூர்: கலாமண்டபம், மலேசிய இந்து சங்கம்.

தியாகராசன், சாமி. (1994). *பெரியபுராணச் சிந்தனை.* கும்பகோணம்: திருநெறி தமிழ்ப் பதிப்பகம். முதல் பதிப்பு.

பரமசிவம், சொ. (1992). *பெரியபுராணம் காட்டும் பண்பாடு.* சென்னை: பட்டுப் பதிப்பகம். முதற்பதிப்பு.